வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்- நாராயணசாமி

தேதி 9.10.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

ஆயுர்வேதம் தொடர்பான தொழில் முயற்சிகளில் இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தை, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காணொளி காட்சி மூலம், மகாராஷ்டிர மாநிலத்திற்கான, 7 ஆயிரத்து 600 கோடி ரூபாய் வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, லாவோஸ் நாட்டிற்கான, 2 நாள் பயணமாக நாளை, வியன்டியன் நகருக்கு புறப்பட்டுச் செல்கிறார்.

நாட்டில் நுண்ணூட்டச் சத்துக்களின் குறைபாட்டை போக்கும் வகையில், மக்களுக்கு செறிவூட்டிய அரிசி வழங்கும் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

*முர்மு-ஆயுர்வேதம்*

நாட்டில் பாரம்பரிய மருந்துகள் அதிகம் கிடைக்க ஏதுவாக, ஆயுர்வேதம் தொடர்பான தொழில் முயற்சிகளில் இளைஞர்களை

ஊக்குவித்தல் அவசியம் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் அகில இந்திய ஆயுர்வேதக் கழகத்தின் 8-ஆவது நிறுவன நாள் விழாவை தொடக்கி வைத்துப் பேசிய அவர் ஆயுர்வேதம் எப்போதுமே இந்திய மக்களின் வாழ்வில் ஒருங்கிணைந்த பகுதியாக திகழும் நிலையிலும் சிலர் போலி மருந்துகள் மூலம் மக்களை ஏமாற்றுவதால் இத்தகைய நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியதும் அவசியம் என்றார். நாட்டில் முறையாகப் பயின்ற ஆயுர்வேத மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் முக்கியத் தேவை இருப்பதாக அவர் கூறினார்.

அண்மைக் காலங்களில் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறித்து குடியரசு தலைவர் மகிழ்ச்சி வெளியிட்டார். புதுடெல்லி அகில இந்திய ஆயுர்வேதக் கழகத்தில் செயல்படும் தொழில் ஊக்குவிப்பு மையம் மூலம், இதுவரை ஆயுர்வேதம் தொடர்பான 50 ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் உருவாக்கபட்டு இருப்பதையும் அவர் பாராட்டினார்.

அகில இந்திய ஆயுர்வேதக் கழகத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை குடியரசு தலைவர் வலியுறுத்தினார். விழாவின் போது,

சாஸ்வத ஆயுஷ் என்னும் கண்காட்சி, மற்றும், ஆயுஷ் மருந்தகம் ஒன்றையும் அவர் திறந்து வைத்தார். மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ், டெல்லி துணை நிலை ஆளுநர் திரு விகே சக்சேனா உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

*மோடி-மகாராஷ்டிரா*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காணொளி காட்சி மூலம், மகாராஷ்டிர மாநிலத்திற்கான பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இத்திட்டங்களின் மொத்த மதிப்பு, சுமார் 7 ஆயிரத்து 600 கோடி ரூபாயாகும். கடந்த சில ஆண்டுகளில் மகாராஷ்டிர மாநிலத்தில், பல்வேறு துறைகள் சார்ந்த பல முக்கிய திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளதாகவும், மாநிலத்தின் வரலாற்றில் இத்தகைய வேகம் முன் எப்போதும் காணப்பட்டதில்லை என்றும், பிரதமர் திரு நரேந்திர மோடி தமது உரையில் கூறினார். மராத்தி மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வழங்க வேண்டும் என்ற, மராத்திய மக்களின் நீண்டகால கோரிக்கையை, தமது அரசுதான் நிறைவேற்றி வைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இன்று பிரதமர் அடிக்கல் நாட்டிய திட்டங்களில், நாக்பூர் அம்பேத்கார் சர்வதேச விமான நிலையத்தை தரமுயர்த்தும் பணிகளும், ஷிர்டி விமான நிலையத்தில், புதிய ஒருங்கிணைந்த முனையம் கட்டும் பணிகளும் அடங்கும். மும்பை, நாசிக், அமராவதி, காட்சிரோலி உட்பட மகாராஷ்டிர

மாநிலத்தின் 10 இடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளையும், இன்று பிரதமர் தொடக்கி வைத்தார்.

*மோடி-வெளிநாடு*

பிரதமர் திரு நரேந்திர மோடி, லாவோஸ் நாட்டிற்கான 2 நாள் பயணமாக நாளை, வியன்டியன் நகருக்கு புறப்பட்டுச் செல்கிறார். இப்பயணத்தின் போது 21-ஆவது ஆசியான்-இந்தியா உச்சி மாநாட்டிலும் 19-ஆவது கிழக்காசிய உச்சி மாநாட்டிலும் அவர் கலந்து கொள்வார் என்று, கீழை நாடுகளுக்கான வெளியுறவு அமைச்சகத்தின் செயலர் திரு ஜெய்தீப் மஜும்தார் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். லாவோஸ் பிரதமரின் அழைப்பின் பேரில் பிரதமர் திரு நரேந்திர மோடி அந்நாட்டிற்கு செல்வதாகவும், ஆசியான்-இந்தியா உச்சி மாநாட்டில் பிரதமர் பங்கேற்பது இது 10-ஆவது முறை என்றும் அவர் கூறினார். இந்தியாவிற்கும் ஆசியான் நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை, ஆசியான் நாடுகளின் அரசுத் தலைவர்களுடன் இணைந்து பிரதமர் மறுஆய்வு செய்வார் என்றும் இந்த உறவுகள் எதிர்காலத்தில் பயணிக்க வேண்டிய திசை குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

*அரியானா-சந்திப்பு*

அரியானா சட்டமன்ற தேர்தலில் பிஜேபி பெரும்பான்மை வலுவுடன் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அம்மாநிலத்தின் பொறுப்பு முதலமைச்சர்

திரு நயாப்சிங் சைனி, மாநில பிஜேபி தலைவர் திரு மோகன்லால் பரோலி ஆகியோர் இன்று புதுடெல்லியில், பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினர். அரியானாவில் மீண்டும் ஆட்சி அமைப்பது குறித்தும் புதிய அரசின் பதவியேற்பு விழா குறித்தும் இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. பொறுப்பு முதலமைச்சர் திரு நயாப்சிங் சைனி, முதலமைச்சராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம் எனக் கூறப்படும் நிலையில், செய்தியாளர்கள் இன்று இதுகுறித்து திரு சைனியிடம் கருத்து கேட்டதற்கு, கட்சியின் நாடாளுமன்றக் குழுவும், சட்டப்பேரவைக் குழுவும் இதற்கான முடிவை மேற்கொள்ளும் என அவர் பதில் அளித்தார். அரியானாவில் மொத்தம் உள்ள 90 தொகுதிகளில் பிஜேபி 48 தொகுதிகளில் வெற்றி பெற்று, 3-ஆவது முறையாக மீண்டும் ஆட்சி அமைக்க உள்ளதும், 3-ஆவது முறையாக ஆட்சி அமைக்கும் வாய்ப்பை அம்மாநில மக்கள் ஒரு கட்சிக்கு வழங்குவது, இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத் தக்கது.

*மத்திய-அமைச்சரவை*

நாட்டில் இரத்த சோகை மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களின் குறைபாட்டை போக்கும் வகையில், மக்களுக்கு செறிவூட்டிய அரிசி வழங்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. நுண்ணூட்டப் பாதுகாப்புடன் கூடிய, அனைவரையும் உள்ளடக்கிய

வளர்ச்சிக்கான இத்திட்டத்தினால் அரசுக்கு 17 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் என்று மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

விகாஸ் பி – விராசத் பி திட்டத்தின் கீழ் நாட்டின் வளமாக கடல்சார் பாரம்பரியத்தை பேணிக் காக்கும் வகையில். குஜராத் மாநிலம் லோத்தால் பகுதியில், தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகம் அமைக்கவும் மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது. நாட்டின் எல்லைப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, பிரதமர் திரு நரேந்திர மோடி முக்கியத் துவம் அளித்து வருவதாகவும், இதன்படி, ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள எல்லைப் பகுதிகளில். 2 ஆயிரத்து 280 கிலோமீட்டர் நீளத்திற்கு சாலைகள் அமைக்கப்படும் என்றும், அமைச்சர் தெரிவித்தார்.

*ரிசர்வ் வங்கி*

ரிசர்வ் வங்கி இதர வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய காலக் கடன் மீதான, ரெப்போ வட்டி விகிதத்தை ஏற்கனவே உள்ள அதே அளவில் 6.5 சதவிகிதமாக பராமரிக்க ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது. ரெப்போ வட்டி விகிதம் மாற்றப்படாமல் ஒரே அளவில் அறிவிக்கப்படுவது, இது, தொடர்ந்து 10-ஆவது முறையாகும். கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல்

வட்டி விகிதம் இதே அளவில் 6.5 சதவிகிதமாக இருந்து வருகிறது. நடப்பு நிதியாண்டின் முதல் 3 மாதங்களில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.6 சதவிகிதம் வளர்ச்சி அடைந்திருப்பதாகவும், ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. ரிசர்வ் வங்கியின் பணக் கொள்கை குழு, மும்பையில் 3 நாள் நடத்திய கூட்டத்திற்கு பின்னர் இன்று வெளியிட்ட அறிக்கையில் இந்த விவரங்கள் இடம் பெற்றுள்ளன. பணக் கொள்கைக் குழுவின் அடுத்தக் கூட்டம் டிசம்பர் 4 முதல் 6-ஆம் தேதி வரை மும்பையில் நடைபெறும்.

***வாழ்விட தினம்***

இளைஞர்களின் உள்ளாற்றலை முழுமையாக பயன்படுத்துவதன் மூலம் நல்ல சமுதாயத்தை உருவாக்குவதில் அரசு முக்கிய கவனம் செலுத்தி வருவதாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்புற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் திரு தோக்கன் சாஹு கூறி உள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற உலக வாழ்விட தின விழாவை தொடக்கி வைத்துப் பேசிய அவர் பொருளாதார ரீதியிலும், சுற்றுச்சுழல் ரீதியிலும் வளங்குன்றா சமுதாயமாக நாட்டை மேம்படுத்துதல் அவசியம் என்றார்.

***கைலாஷ்நாதன்***

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கே கைலாஷ்நாதன், இன்று மாலை திருவள்ளுவர் நகர் ஸ்ரீ சாய்பாபா சுவாமிகள் திருமண

மண்டபத்தில் நடைபெறும், சர்வஜன ஸ்ரீஸ்ரீ துர்கா பூஜைக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்கிறார். புதுச்சேரி பங்க பாரதி அமைப்பினர், இதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

**வானிலை**

லட்சத் தீவு மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு அரபிக் கடல் பகுதியில் இன்று காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது. இதுவடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 3-4 நாட்களில் மத்திய வங்க கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளிலும் இலங்கை மற்றும் அதனை ஒட்டியப் பகுதிகளிலும், 2 வளிமண்டல மேலடுக்கு சுழற்சிகளும் நிலவுகின்றன. இதன் காரணமாக இன்றைய தினம் தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், வேலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட 13 மாவட்டங்களிலும் நாளை 10 மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலும், புதுச்சேரி காரைக்கால் பகுதிகளிலும் வரும் 15-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. லட்சத் தீவு, மாலத்தீவு, கேரள-கர்நாடக கடலோரப் பகுதிகள் மற்றும் தென்கிழக்கு-தென்மேற்கு அரபிக் கடல் பகுதிகளில், அதிகபட்சம் மணிக்கு 50 கிலோமீட்டர் வரையிலான

வேகத்தில் சூறாவளி காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*மகப்பேறு*

2000 முதல், 2020-ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் இந்தியாவில் மகப்பேற்றுக் கால மரண விகிதம், 70 சதவிகிதம் குறைந்து இருப்பதை ஐ நா மக்கள் தொகை நிதியத்தின் செயல் இயக்குநர் டாக்டர் நட்டாலியா கானெம் பாராட்டி உள்ளார். இதனால் விளிம்பு நிலை சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் உட்பட, ஆயிரக் கணக்கிலான பெண்களின் உயிர் காப்பாற்றப் பட்டுள்ளதாகவும், 2030-ஆம் ஆண்டிற்கான நீடித்த வளர்ச்சி இலக்குகளின் படி, மகப்பேற்றுக்கால மரணங்கள் தொடர்பான இலக்குகளை இந்தியா முழுமையான அளவில் எட்ட இதனால் ஏதுவாகும் என்றும் அவர் கூறி உள்ளார். குடும்பக் கட்டுப்பாடு மற்றும் மகப்பேற்று நலனை மேம்படுத்துவதில் இந்தியா இதுவரை எட்டி உள்ள அசாதாரண முன்னேற்றத்தைப் பாராட்டி அவர் இன்று புதுடெல்லியில் நற்சான்றுப் பத்திரம் வழங்கினார். மத்திய சுகாதாரத் துறைச் செயலர் திருமதி புண்யா ஸ்ரீவாஸ்தவா இந்த சான்றிதழைப் பெற்றுக் கொண்டார்.

*ஜம்மு-காஷ்மிர்-மனோஜ்*

ஜம்மு-காஷ்மீரில் பெரும் எண்ணிக்கையில் சட்டமன்ற தேர்தலில் பங்கேற்ற மக்களுக்கும், தேர்தலை அமைதியான, வெளிப்படையான

முறையிலும், சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத் துவதில் தேர்தல் அதிகாரிகள், போலீசார் மற்றும் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட முயற்சிகளுக்கும், ஜம்மு-காஷ்மீர் மக்களுக்கும் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார். ஜம்மு-காஷ்மீர் மக்கள் பெரும் எண்ணிக்கையில் சட்டமன்ற தேர்தலில் பங்கேற்றது, துடிப்பான ஜனநாயகத்திலும், நாட்டின் ஜனநாயக மாண்புகள் மீதும் அவர்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு சான்றாகவே அமைந்துள்ளதாக திரு மனோஜ் சின்ஹா தெரிவித்துள்ளார். ஜம்மு-காஷ்மீர் தற்போது, மக்களை மையமாகக் கொண்ட நல்லாட்சி, நல்லிணக்கம் மற்றும் சமூகநீதிக் கொள்கையின் அடிப்படையில் உயர்ந்து நிற்பதாக அவர் மேலும் கூறி உள்ளார்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

ஆயுர்வேதம் தொடர்பான தொழில் முயற்சிகளில் இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தை, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காணொளி காட்சி மூலம், மகாராஷ்டிர மாநிலத்திற்கான, 7 ஆயிரத்து 600 கோடி ரூபாய் வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, லாவோஸ் நாட்டிற்கான, 2 நாள் பயணமாக நாளை, வியன்டியன் நகருக்கு புறப்பட்டுச் செல்கிறார்.

நாட்டில் நுண்ணூட்டச் சத்துக்களின் குறைபாட்டை போக்கும் வகையில், மக்களுக்கு செறிவூட்டிய அரிசி வழங்கும் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

-------------------------------